மந்திரத்தைச் செயல்படுத்தி, (மேசையைத் தட்டும் ஒலி) பல்வேறு மக்கள் நலத் திட்டங்களை அள்ளித் தரும், காவிரி நடுவர் மன்றத் தீர்ப்பினை அரசு இதழில் வெளியிட வேண்டி சட்டப் போராட்டம் நடத்தி, காவிரி நீரை மீட்டுத் தந்த காவிரித் தாயே! கருணைத் தெய்வமே! பொன்னியின் செல்வியே! திருமயம் தொகுதியில் பி. அழகாபுரி அரசு பெண்கள் மேல்நிலைப் பள்ளியில் உள்ள ஆதி திராவிடர் நல மாணவியர் விடுதிக்கு சொந்தக் கட்டடம் கட்ட நிதி வழங்கி ஆணையிட்ட மாண்புமிகு இதய தெய்வம் புரட்சித் தலைவி அம்மா அவர்களுக்கு என் சார்பிலும், தொகுதி மக்களின் சார்பிலும் கோடானுகோடி நன்றியை பணிவுடன் தெரிவித்துக்கொள்கிறேன். நன்றி, வணக்கம்.

முற்பகல் 10–55

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *வினா வரிசை எண் 87, மாண்புமிகு உறுப்பினர் திரு. ம. முத்துராமலிங்கம், மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் அவர்கள்.*

87—

சொகுசுப் பேருந்து

***8337—திரு. ம. முத்துராமலிங்கம்:**

மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) திருமங்கலம் தொகுதி, பேரையூரிலிருந்து சென்னைக்குக் கூடுதலாக சொகுசுப் பேருந்து இயக்க அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

மாண்புமிகு திரு. வி. செந்தில்பாலாஜி, போக்குவரத்துத் துறை அமைச்சர்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,*

(அ) மற்றும் (ஆ) திருமங்கலம் தொகுதி, பேரையூரிலிருந்து சென்னைக்கு தமிழ்நாடு அரசு போக்குவரத்துக் கழகம், மதுரை சார்பில் ஒரு சாதாரண பேருந்து இயக்கப்பட்டு வருகிறது. மேற்படி பேருந்தில் பயணிகளின் எண்ணிக்கை என்பது டிசம்பர் மாதம் 52 சதவிகிதம், ஜனவரி மாதம் 56 சதவிகிதம், பிப்ரவரி மாதம் 50 சதவிகிதம் என சராசரியாக 53 சதவிகிதம் அளவிற்கு மட்டுமே

2013 மார்ச் 27]

பயணிகள் பயணம் செய்து வருகின்றனர். எனவே, பயணிகளுடைய எண்ணிக்கையின் அளவு அதிகரிக்கும்பொழுது, மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா அவர்களின் மேலான ஆணையைப் பெற்று, கூடுதலாகப் பேருந்துகள் இயக்கப்படும் என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் திரு. ம. முத்துராமலிங்கம் அவர்கள்.

திரு. ம. முத்துராமலிங்கம்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அரசு அலுவலர்களைத் தேடி மக்கள் அலைந்த காலத்தைப் போக்கி, மக்களைத் தேடி அரசு அலுவலர் வருவார்கள் என்று புரட்சிகரமான திட்டம், "அம்மா திட்டம்" என தந்த மாண்புமிகு தமிழக முதலமைச்சர் புரட்சித் தலைவி அம்மா அவர்களுடைய ஆட்சியில் (மேசையைத் தட்டும் ஒலி) கேட்டதையெல்லாம் கொடுத்துக் கொண்டிருக்கின்ற இந்த நல்ல வேளையில் பேரையூரிலிருந்து சென்னைக்கு வரக்கூடிய பேருந்து சாதாரண பேருந்தாக இருக்கிற காரணத்தினால், மக்கள் சில வசதிகளுக்காகத் தனியார் பேருந்துகளில் சென்று கொண்டிருக்கிறார்கள். அதற்காக, தற்போது அமைக்கப்பட்டுள்ள புதிய வடிவம் கொண்ட புதிய பேருந்துகளை வழங்கினால், கூடுதலாக மக்கள் பயணம் செய்யத் தயாராக இருக்கிறார்கள். அப்படி வருகின்றபொழுது, இப்போதுள்ள பழைய பேருந்துகளை மாற்றி புதிய பேருந்துகளையும், அதற்காக பயணிகள் கூடுதலாக வருகின்றபோது, கூடுதலாகப் பேருந்துகளை வழங்க மாண்புமிகு அமைச்சர் அவர்கள் முன்வருவார்களா என அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் அவர்கள்.

மாண்புமிகு திரு. வி. செந்தில்பாலாஜி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அரசுப் போக்குவரத்துக் கழகத்தினுடைய வரலாற்றில் அரசு விரைவுப் போக்குவரத்துக் கழகத்தினுடைய பேருந்துகளின் எண்ணிக்கை கடந்த இரண்டு ஆண்டுக் காலத்தில் 772 பேருந்துகளாக உயர்ந்திருக்கிறது. (மேசையைத் தட்டும் ஒலி) அவற்றில் 442 புதிய பேருந்துகள் மக்களுடைய பயன்பாட்டிற்கு மாண்புமிகு முதலமைச்சர் அம்மா அவர்களின் திருக்கரங்களால்

கொடி அசைத்து துவக்கி வைக்கப்பட்டு, மக்களுடைய பயன்பாட்டிற்குச் சென்று கொண்டிருக்கின்றன. 330 பேருந்துகள் மக்களுடைய பயன்பாட்டிற்காகத் தயார் செய்யப்பட்டு வருகின்றன. எனவே, மாண்புமிகு உறுப்பினர் அவர்களுடைய கோரிக்கை மனுவிற்கு மாண்புமிகு அம்மா அவர்களுடைய உத்தரவினைப் பெற்று புதியதாக 330 பேருந்துகள் வருகின்றபொழுது, அந்தப் பகுதியிலிருந்தும் சொகுசுப் பேருந்துகளை இயக்குவதற்கு நடவடிக்கை எடுக்கப்படும் என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் திரு. ம. முத்துராமலிங்கம் அவர்கள்.

திரு. ம. முத்துராமலிங்கம்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு அம்மா அவர்களால் அனுமதிக்கப்பட்ட புதிய பேருந்துகளை இயக்குகின்றபொழுது பேரையூரிலிருந்து சென்னைக்கு வருங்காலத்தில் புதிய பேருந்து இயக்க வகை செய்த மாண்புமிகு முதலமைச்சர் அவர்களுக்கும் மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் அவர்களுக்கும் நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வினா வரிசை எண் 88, மாண்புமிகு உறுப்பினர் திரு. கே.பி.பி. பாஸ்கர், மாண்புமிகு செய்தி மற்றும் சிறப்புத் திட்டங்கள் செயலாக்கத் துறை அமைச்சர் அவர்கள்.

88—

மணிமண்டபம்

***20290—திரு. கே.பி.பி. பாஸ்கர்:**

மாண்புமிகு செய்தி மற்றும் சிறப்புத் திட்டங்கள் செயலாக்கத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) நாமக்கல்லில் கவிஞர் இராமலிங்கம் பிள்ளைக்கு மணிமண்டபம் அமைக்க அரசு முன்வருமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?